**தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திணைக்கள்த்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) ஆம் பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதன் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால், நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**அவதானிப்புகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ii ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | நிரந்தரமான நியமிப்பொன்று செய்யப்படும் வரையில் தற்காலிக நடவடிக்கையாக மட்டுமே பதில் நியமிப்புச் செய்யப்படல் வேண்டும். முழு நேரம் வேலை செய்யும் உத்தியோகத்தர் ஒருவரின் சேவை அப்பதவிக்குத் தொடர்ந்தும் தேவைப்படின் காலதாமதமின்றி நிலையான நியமிப்பொன்றைச் செய்தல் வேண்டும். முழுநேர உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையில்லாவிடின் உறுப்புரை 13.2 இற்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென குறிப்பிடப்பட்டியருப்பினும் | தாபன விதிக்கோவைக்கமைய செயற்படவேண்டும் | திணைக்களத்தின் சேவைகளில் ஏற்படும் தேவைக்கேற்ப பதில் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. உயர்நீதிமன்றத்தின் வழக்கு எண் S.C.(FR) 73/2018 க்கு உயர்நீதிமன்றத்தின் வழங்கப்பட்ட தீர்ப்புக்கு அமைவாக இதுவரையில் 2017.09.26 ஆம் திகதி தொடக்கம் அவர்கள் இலங்கை திட்டமிடல் சேவையில் விசேட தரத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அரச சேவைகள் ஆணைக்குழுவின் மேவுகை அனுமதியின் கீழ் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரரினால் 2013 மே 02 ஆம் திகதி தொடக்கம் பணிப்பாளர் பதவியிலிருந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மேலதிக பணிப்பாளர் பதவியில் பதில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. பதில் நியமனம் வழங்கப்பட்ட திகதி தொடக்கம் 2018 டிசம்பர் 31 ஆம் திகதி வரை பதில் கடமைக்கான கொடுப்பனவுகள் மற்றும் அப்பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளும் செலுத்தப்பட்டுள்ளன. | | |
| (ஆ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | பின்வரும் சந்தர்ப்பங்களில் சுற்றறிக்கையின் படி செயற்படவில்லை<br>(i). முழு பணியாளர் தொகுதிக்கும் உரிய வருடாந்த செயற்றிறன் உடன்படிக்கையில் கையெழுத்து இடாமை.<br><br>(ii). முழு பணியாளர் தொகுதிக்கும் ஒப்படைக்கப்படும் குறித்தொதுக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பில் நிலவுகின்ற திறன்கள் மற்றும் கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு தேவையான திறன்களுக்குமிடையே காணப்படும் இடைவெளியை கண்டறிவதற்கு பொருத்தமான செயன்முறை ஒன்றை தயாரித்திருக்காமை. | சுற்றறிக்கைக்கு அமைவாக செயற்படவேண்டும் | அரச துறையில் மனித வளத்தை அபிவிருத்தி செய்தல் தொடர்பான அரச நிருவாக சுற்றறிக்கை 02/2018 இற்கு அமைய செயற்படவேண்டும் என்பதை குறித்து வைத்துள்ளேன். |

(iii). திறன் இடைவெளியை குறைக்கும் பொருட்டு நிறுவனத்துக்கு பொருத்தமான மனிதவள அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரிக்காமை.

(iv). மனிதவள அபிவிருத்தித் திட்டத்தில் பணியாளர் தொகுதியிலுள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களிற்கு குறையாத பயிற்சிக்கான சந்தர்ப்பமொன்று உறுதிபடுத்தப்படவேண்டும். 2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு திணைக்களத்தின் பணியாளர்களின் எண்ணிக்கை 85 ஆக அமைந்திருந்ததோடு 2018 ஆம் ஆண்டில் பணியாளர் தொகுதியின் உறுப்பினர்கள் 32 பேருக்கு மாத்திரம் அதாவது 37 சதவீதத்தினருக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வு ஆண்டிற்குரிய மூலதன செலவுகளுக்காக ரூபா 114,000,000 ஆகிய மொத்த தேறிய ஒதுக்கீட்டில் ரூபா 80,387,712 இனை அதாவது 70.5 சதவீதமானது மீதியாக காணப்பட்ட 3 மீண்டெழும் செலவு விடயங்களின் மிகுதி தேறிய ஒதுக்கீட்டின் 50 சதவீதத்தை விட அதிகமாகும். போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மதிப்படுகளை இயலுமானவரையில் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கட்டிட புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தல் செயற்பாடுகளின் கீழ் 3 புதிய கட்டிடங்களுக்கு திருத்தவேலைகள் செய்ய வேண்டியிருப்பினும், அதில் ஒன்றிற்கான உத்தேசிக்கப்பட்ட செலவு குறைந்த காரணத்தாலும் மற்றைய 2 கட்டிடங்களும் திணைக்கள செயற்பாடுகள் நிமித்தமாக ஏற்பட்ட வேலைப்பழு போன்றவை அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணங்களாகும்.<br><br>பணியாளர்களுக்கு பயிற்சியளித்தல் செயற்பாட்டின் கீழ் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் பின்னூட்டல் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை நடாத்த திட்டமிட்டமை மற்றும் JICA நிறுவனத்தின் உதவித் தொகை கிடைக்கப்பெற்றமையால் ஒதுக்கீடு எஞ்சியுள்ளது.<br><br>செயற்றிட்டத்தை தயாரிக்கும் வாய்ப்புகளை வழங்கும் நிகழ்ச்சி நிரல் உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் செயற்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | | | அதேவேளை அதன் தேர்ச்சியினை பெற்றுக்கொள்வது எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. |
| (ஆ) | மீண்டெழும் செலவு விடயங்களின் கீழ் ரூபா 1,546,000 ஆகிய மொத்த தேறிய ஒதுக்கீடு மற்றும் வேறொரு செலவு விடயத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,800,000 தேறிய ஒதுக்கீட்டின் ரூபா 433,484 அதாவது 24 சதவீதமானது 2018 டிசம்பர் 31 ஆம் திகதி மிகுதியாக காணப்பட்டது. | மதிப்படுகளை இயலுமானவரையில் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிலிருந்தே செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் அதில் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக கொள்வனவு செயற்பாடுகளை நிறைவேற்ற முடியாமையினால் குத்தகை வரி தவணைக்கட்டணமாக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,546,000 தேறிய ஒதுக்கீடானது மிகுதியாக காணப்பட்டது.<br><br>குறித்த வருடத்தில் மொழிபெயர்ப்பு கட்டணங்களாக செலுத்தப்படுவதற்காக எதிர்பார்க்கப்பட்ட செலவுகளை எதிர்கொள்ளவேண்டிய தேவையேற்படாமையால் 24% ஆன சேமிப்பொன்று உள்ளது. |
| (இ) | மீளாய்வு ஆண்டினுள் 4 செலவு விடயங்களிற்கான அடிப்படைச் செலவுகள் மதிப்பீடு ஒன்றுக்கு நி.பி.66 இனூடாக மாற்றஞ்செய்தலினால் முதலாவது மதிப்பீட்டுத் தொகையின் 33 சதவீதம் தொடக்கம் 63 சதவீதம் வரையான இடைவெளி காணப்படுகின்றது. | மதிப்படுகளை இயலுமானவரையில் சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் | 4 செலவு விடயங்களிற்கான அடிப்படைச் செலவு மதிபீட்டுக்கான திருத்தங்கள் எதிர்வுகூறப்பட்டிராததுடன் , நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான வருடாந்த மாநாடுக்காக திணைக்கத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் |

| | | |
|---|---|---|
| | | ஒருவரை பங்குபற்றச் செய்ய வேண்டியேற்பட்டமை. திணைக்களத்தின் சீருடை உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடங்கள் நிலவியமையால் எதிர்பார்க்கப்பட்ட செலவுகள் ஏற்படாமை. எதிர்பார்த்ததைப்போன்று முதன்மையான சீர்திருத்தங்கள் ஏதுவும் மேற்கொள்ளப்படாமை. குத்தகை முறை அடிப்படையில் வாகனங்களை கொள்வனவு செய்யாமையினால் குத்தகை தவணை கட்டணங்களை செலுத்த வேண்டிய தேவை யேற்படாமை இதற்கான காரணமாகும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3(ஆ) பிரிவின் தேவைப்பாடுகளுக்கு இணங்க அரச திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயற்றிட்ட செயற்றிட்டத்தில் குறித்த வருடத்தின் பாதீட்டை அடிப்படையாக கொண்ட முன்னுரிமை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டம் (Action Plan), செயற்படுத்திய காலவரையறை (Time Line) மற்றும் அச்செயற்பாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் காட்டப்பட்ட வேண்டும். அவ்வாறாயினும் தேசிய | இயலுமானவரையில் உத்தேசிக்கப்பட்ட இலக்குகளை துல்லியமாக குறிப்பிடுவதன் மூலம் அவ் இலக்குகளை அடைவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளல். | 2018 வருடத்தில் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டத்தில் இத்திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்படுகை கால வரையறை மற்றும் அச்செயற்பாடுகளுக்கான உத்திதேசிக்கப்பட்ட பூர்த்தி / இலக்கு துல்லியமாக குறிப்பிடப்படாமைக்கான காரணம் வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களினால் மதிப்பீடுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்றிட்ட ஆலோசனை |

| | | |
|---|---|---|
| திட்டமிடல் திணைக்களத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயற்றிட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் துல்லியமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | | மற்றும் பரிந்துரைகள் எதிர்பார்ப்புடன் சமர்ப்பிக்கப்படுவதுடன், அமைச்சரவை பத்திரங்கள் தொடர்பில் எதிர்வு கூறல் மேற்கொள்ளல் கடினமானது என்பதால் அதனிடையே திணைக்களத்தின் நிருவாக பிரிவுகள் மற்றும் கணக்கீட்டு பிரிவு ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக காலவரையறை மற்றும் உத்திதேசிக்கப்பட்ட பூர்த்தியாக்கல் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. |

**3.2 எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் செயற்பாடொன்றான விசேட/பிரதேச அபிவிருத்தி திட்டங்களை தயாரிப்பதற்குரிய தெற்கு அபிவிருத்தி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியோற்பாடுகளுக்குரிய பின்வரும் செயற்திட்டங்கள் தொடர்பில் மதிப்பீடொன்றினை மேற்கொள்ளாது செயற்திட்டங்களை நடைமுறைப்புடுத்துவதனை போன்றே திருத்தங்களுக்காகவும் எதிர்ப்பொன்று இல்லையென குறித்த அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. | முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் மதிப்பீடுகளை மேற்கொண்டு பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் செயற்திட்டமொன்றின் ஆக்கபூர்வமான தன்மை மற்றும் செற்திறனை அதிகரித்தல் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இது தொடர்பில் இவ்வாறானதொரு செயல்நடவடிக்கை திட்டமொன்றில் காணப்படும் சிறு செயற்திட்டங்களின் எண்ணிக்கை ஒவ்வொன்றாக கருத்திற்கொள்ளப்பட்டு, மதிப்பாய்வு அறிக்கைகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் கூடிய காலம் எடுப்பதனால், பாதீடுகள் மூலம் நிதியேற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த அந்த செயற்திட்டங்கள் உரிய காலத்தில் நடைமுறைப்புடுத்துவதற் |

| | | | |
|---|---|---|---|
| (i) | மாத்தறை மாவட்டத்தினுள் ரூபா 554.25 மில்லியன் பெறுமதியுடைய 712 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். | | கு இயலுமை கிடைக்காமையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாட்டினை உரிய ஆண்டினுள் ஈடுபடுத்துவதற்கு இயலக்கூடியமானதாக இருப்பதுடன், அவ்வாறான நூற்றுக்கணக்கான சிறு செயற்பாடுகளுக்காக தனித்தனியாக மதிப்பீட்டு அறிக்கைகளை தயாரித்தல் நடைமுறைச் சாத்தியமற்றதென்பதை அவதானிக்கின்றேன். |
| (ii) | மாத்தறை மாவட்டத்தினுள் ரூபா 49.64 மில்லியனான பெறுமதியுடனான புதிய 5 செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல். | | |
| (iii) | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களினுள் மாத்தறை மாவட்டத்தின் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குரிய செயற்திட்டங்களை திருத்தம் செய்தல். | | |
| (ஆ) | செயல்நடவடிக்கை திட்டத்தினுய் உள்ளடக்கப்பட்டுள்ள திட்டமிடல் நடைமுறையினை தயாரித்தல் (Preparation of Planning Techniques) எனும் | செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள் ள செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்த | செயல்நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த திட்டமிடல் நடைமுறையினை தயாரித்தல் (Preparation of Planning Techniques) தொடர்பில் தயாரிக்கப்பட்டுள்ள புத்தகத்தினை நாளதுவரையாக்குவதற்கு நிதி அநுசரணையை வெளிவாரி நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், பெற்றுக்கொள்ள முடியாமையால் அந்’த பணியை மேற்கொள்ள முடியாதிருந்தது. |

**3.3 பெறுகைகள்**

--------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வாகனமொன்றினை பழுதுபார்ப்பதற்காக டொயோட்டா லஙடகா தனியார் கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 865,514 தொகையான மதிப்பீடானது அதிக விலையுடையதாக காணப்பட்டமையால் புறக்கணிக்கப்பட்டு உரிய பழுதுபார்த்தல் பணிகளுக்காக மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட 3 நிறுவனங்களிடமிருந்து கூறுவிலைகள் கேரப்பட்டிருந்தது. அந்த கூறுவிலைகளின் ஆகக் குறைந்த விலையான ரூபா 322,525 இற்கு பழுதுபார்க்கப்படாது மீண்டும் டொயோட்டா லங்கா கம்பனியிடமிருந்து மாத்திரம் 02 சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் கோரப்பட்டு ரூபா 417,498 ஆன கிரயத்திற்கு பழுதுபார்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்கமைய ரூபா 94,973 தொகை கூடுதலாக செலவிடப்பட்டிருந்தது. | ஒரே விடயத்திற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒன்றுடன் ஒன்று பொருந்தாதவாறு கூறுவிலைக்ள கோரப்படலாகாது. | பழுதுபார்த்தல்களுக்காக உள்நாட்டு முகவர் நிறுவனமொன்றிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டதுடன், அனுப்பப்பட்ட மதிப்பீடு ரூபா 865,514 ஆகும். அந்த விலை அதிகமானது என்பதால் பதிவு செய்யப்பட்ட கராஜ்களிலிருந்து கூறுவிலைகள் கோரப்பட்ட போதிலும், மீண்டும் உள்நாட்டு முகவர் நிறுவனத்திடமிருந்து மதிப்பீடொன்றினை பெற்றுக்கொள்ளுமாறு கிடைத்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் மீண்டும் ரூபா 401,010 ஆன மதிப்பீடொன்று வழங்கப்பட்டது.<br><br>செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் வாகனமொன்றனை பெற்றுக்கொள்ள முயற்சிசெய்த போதிலும், அது தோல்வியடைந்தமையால் மீண்டுமொரு மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.<br><br>இந்த மதிப்பீடு ரூபா 417,498 ஆக அதிகரித்திருந்ததுடன், முன்னர் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைகளுக்கமைய புதிய மதிப்பீடொன்றின் அடிப்படையில் குறிக்கப்பட்ட உதிரிப்பாகங்களை இட்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் பெறுகைகள் குழுவிற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | அனுப்பி இந்த பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டது. |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.12 இன் பிரகாரம் பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் வெளிப்படுத்தல்கள் திணைக்களத்தினால் பெற்றுக்கொள்ளப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அங்கத்தவர்களால் மேற்கொள்ளப்படும் கூற்றுக்களை பெற்றுக்கொள்ள குறித்து வைத்துக்கொள்ளப்பட்டது . |

## 4 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ‘‘நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்கமைய திணைக்களத்தினால் திணைக்களம் அறிந்திருந்து உரிய இலக்குகள் மற்றும் மூலோபாயங்களுடனான துறைரீதியான நிலைபேறான அபிவிருத்தி மூலோபாயங்கள் விவசாயப் பிரிவிற்காக தயாரிக்கப்பட்டிருந்ததுடன், ஏனைய 08 துறைகளுக்காக நிலைபேறான இலக்குகள் மற்றும் மூலோபாயங்களை இனங்காணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திணைக்களத்தினால் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி மூலோபாயங்கள் மற்றும் கொள்கைகள் நிலைபேறான அபிவிருத்திக்கு இணங்கும் வகையில் தயாரிக்கப்படும். விவசாயப் பிரிவிற்காக தயாரிக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி மூலோபாயங்கள் அதற்கான உதாரணமொன்றாகும். அவ்வாறே ஏனைய 08 துறைகளுக்காக நிலைபேறான இலக்குகள் மற்றும் மூலோபாயங்களை இனங்காணுவதற்கு இந்த வருடத்தினுள் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அனைத்து செயற்திட்டத்தினதும் நிலைபேறான அபிவிருத்திக்குரிய மதிப்பீட்டு அளவீடுகள் மற்றும் மூலோபாயங்களை முன்வைப்பது அத்தியாவசியம் என்பதுடன், செயற்திட்டங்களை மதிப்பீடு செய்யும் போது நிலைபேறான அபிவிருத்தியுடன் இணங்குதல் மதிப்பீட்டு அளவுகோலொன்றாக புதிய செயற்திட்ட மதிப்பீட்டு பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

## 4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 118 மற்றும் உள்ளபடியான பதவியணி 85 ஆனமையால் 33 வெற்றிடங்கள் காணப்பட்டன. அது சிரேஷ்ட நிலையிலான 12 வெற்றிடங்களையும், மூன்றாம் நிலையிலான 02 வெற்றிடங்களையும் இரண்டாம் நிலையிலான 15 வெற்றிடங்களையும் ஆரம்ப மட்டத்திலான 04 வெற்றிடங்களையும் கொண்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | வெற்றிடங்களை நிரப்புமாறு நிதி அமைச்சிற்கு அவ்வப்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |